# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## S.C. 141/2017

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் நாள் திங்கட்கிழமை PW-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW3 Examined as PW 3

| | | |
|---|---|---|
| Date | : | 22.01.2024 |
| Name | : | பாஸ்கரன் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

A1 present. A2 produced on P.T.warrant.

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் பொறையார் தலைமை காவலரக பணிபுரிந்த நான் காவல்கண்காணிப்பாளர் உத்தரவின்பேரில் தனி பிரிவு அலுவலராக திருவெண்காடு காவல்நிலையத்தில் பணிபுரிந்து வந்தபோது 12.08.2012 தேதி பாராளுமன்ற உறுப்பினர் மணி சங்கர் அய்யர் மக்கள் குறை தீர்க்கம் நிகழ்ச்சியில் திருவெண்காடு காவல் நிலைய ஆய்வாளர் கார்த்திகசாமி சிறப்பு உதவி ஆய்வாளர் பாஸ்கரன் காவலர் மோகன் , கண்ணன் அரசு வாகனத்தை ஓட்ட நாங்கள் பாதுகாப்பு பணிக்காக சென்றோம். பாதுகாப்பு பணிக்காக சீர்காழி துணை கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் சீர்காழி காவல்நிலைய ராஜீவ்காந்தி ஆகியோர் வந்திருந்தினர். பாதுகாப்பு பணி முடிந்து ஆய்வாளர் செந்தில்குமார் முன்னே சென்றார். ஓட்டகம் பிரிவு சாலை அருகே சீர்காழி

மெயின்ரோட்டில் பின்னர் பெயர் விலாசம் கேட்டுதெரிந்த இளையராஜா, கார்த்தி ஆகிய இருவரும் வாகனத்தை வழி மறித்துக்கொண்டு இருந்ததை சீர்காழி ஆய்வாளர் செந்தில்குமார் ஏன் வண்டியை குறுக்கே நிறுத்தியிருக்கிறாய் என்று கேட்டதற்குபோஸிசை தகாத வார்த்தையால் திட்டி கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் இளையராஜா இத்தோடு செத்துபோ என்று சொல்லி மண்டையில் ஓங்கி அடித்ததில் இடது கையால் தடுத்ததில் செந்தில்குமாருக்கு இடது புருவத்தில் காயம் ஏற்பட்டது. கார்த்தி கட்டையால் அடித்தபோது இடது கையில் காயம் ஏற்பட்டது. பின்னர் நாங்கள் பாதுகாப்பு பணி முடிந்து திரும்ப வந்தபோது முன்னே சென்ற வாகனத்தில்பிரச்சனை ஏற்பட ஆய்வாளருக்கு ரத்த காயம் ஏற்பட்டது. எங்களை கண்டதும் ஓடிவிட்டார்கள். ஆய்வாளர் ஒட்டுனரை அழைத்துக்கொண்டு சீர்காழி மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

சம்பவ தினத்தில் திருவெண்காடு காவல் நிலைய தனிப்பிரிவு அலுவலராக பணியில் இருந்தேன். நிகழச்சி முடிந்து சீர்காழி ஆய்வாளர் திருவெண்காடு ஆய்வாளர் வாகனம்தொடர்ச்சியாக வந்தது என்றால்சரிதான், முன்னே பின்னே வந்தது. சம்பவ இடம் போக்குவரத்து அதிகமுள்ள இடம் உள்ள இடம் என்றால்சரிதான். எனவே அந்த பகுதியை சேர்ந்த நபர்கள் போக்குவரத்துக்கு இடையூராக வண்டிய நிறுத்த வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. பந்தோஸ்பத்து வாகனத்தால் 2ம் எதிரியின்வாகனத்தை இடித்து கிழேதள்ளிவிட்டார்கள் என்றால் சரியல்ல. 2ம் எதிரி தனது இருசக்கர வாகனத்தை சாலையின் இடதுபுற ஓரத்தில் நிறுத்திருந்தார் என்றால் சரியல்ல. அது குறித்து முதல்எதிரி கேட்டதால் போலீசார் எதிரிகளை அடித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகைள ஜீப்பிலேயே வைத்தீஸ்வரன்கோயில் காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து காட்டுமிரன்டிதனமாக அடித்துள்ளோம் என்றால்சரியல்ல. போலிசார் தாக்கியதால் முதல்எதிரிக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் எதிரிகளை அடித்ததால் அவருடைய தாயார் தனிப்பட்ட வழக்கு பதிவு செய்தால் எதிரிமீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த வழக்கு மயிலாடுதுறை

நீதித்துறை நடுவர் எண்1ல் CRMP.41/2013 நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. நான் வந்த ஜீப்பில் சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன் ஒட்டுனர் மணி ஆகியோர் இருந்தார்கள். அதில் முதல் எதிரி மிலிட்ரி பணியில் இருப்பதாகவும் விடுமுறையில்வந்திருப்பதாகவும் சொல்லியதை காதில் வாங்காமல் அவரை அடித்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவத்தில் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்றாலும் அது அவருடைய ஆஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக திருவெண்காடு ஆய்வாளர் விசாரணை செய்தார். வழக்கு தொடர்பாக ஆஜர்எதிரிகள் ஆபாசமாக பேசவில்லை என்றாலும் அ.சா.1க்கு எவ்வித காயமும் ஏற்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளிடமிருந்து எவ்வித தடயபொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 சிகிச்சைக்கு சேர்த்தது நான்தான். அன்பழகன் என்ற ஆய்வாளர் உடன் இருந்தார். அ.சா.1 எத்தனை நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டு எப்போது விடுவிக்கப்பட்டார் என்பது தெரியவில்லை. சம்பவத்தை நான்நேரில் பாரக்க்வில்லை என்றாலும்சம்பவ நேரத்தில் நான் அங்கு இல்லை என்றாலும் ஆய்வாளர் என் உயர்அதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் போலிசாரல் காயம் அடைந்தவரை வெளிநோயாளியாகவும் நாங்கள் சிகிச்சை அளிக்கவில்லை என்றால்சரியல்ல.